செ.வெ.எண்:38 நாள்:27.08.2020

# பத்திரிக்கை செய்தி குறிப்பு

நாமக்கல் மாவட்ட சமூகநல அலுவலகத்தின் மூலம் **சகி ஒருங்கிணைந்த சேவை மையத்தில்** (OSC) தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிய தகுதியான நபர்களிடமிருந்து கீழ்கண்டவாறு விண்ணப்பங்கள் **05.09.2020** தேதிக்குள் வரவேற்கப்படுகிறது.

### பதவி 1: வழக்கு கையாளுநர் (Case Worker)

வழக்கு கையாளுநர் பதவிக்கு விண்ணப்பிக்க நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும். சமூகப்பணி, உளவியல் மற்றும் வளர்ச்சிப்பணிகள் ஆகிய ஏதேனும் ஒன்றில் இளநிலை பட்டப்படிப்பு படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம். அரசு/அரசு சாரா தொண்டு நிறுவனங்களில் ஒரு வருட பணி அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். இப்பதவிக்கு பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியுடையவராவர். மாத ஊதியம் : ரூ.12,000/- வழங்கப்படும்.

### பதவி 2: பாதுகாவலர் (Security Guard)

பாதுகாவலர் பதவிக்கு ஆண்/பெண் இருபாலரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும். பாதுகாப்பு பணியில் முன் அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மாத ஊதியம் : ரூ.10,000/- வழங்கப்படும்.

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:**

மாவட்ட சமூகநல அலுவலகம்,
கதவு எண். 19, இரண்டாவது தளம்,
மாவட்ட ஆட்சியரகம், நாமக்கல் - 637003.
தொலைபேசி எண் : 04286 – 280230.

**ஒம்/-கா.மெகராஜ் இ.ஆ.ப,**
**மாவட்ட ஆட்சித்தலைவர்,**
**நாமக்கல் மாவட்டம்.**